ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2417/ 47 - 2025 ජනවාරි මස 03 වැනි සිකුරාදා - 2025.01.03

2417/47 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**முலட்டியன பிரதேச சபை**

களியாட்ட வரி

1946 இலக்கம் 12 களியாட்ட வரிக்கட்டளைச்சட்டத்தின்

2 (1) பிரிவின் கீழான அறிவித்தல்

1984, இலக்கம் 37 களியாட்டவரி (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1946, இலக்கம் 12 களியாட்டவரி கட்டளைச்சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள களியாட்ட நடவடிக்கைகளுக்காக அறவிடப்படும் உட்புகும் கட்டணத்தில் பத்து சத வீதம் (10%) களியாட்டவரி நியமித்து அறவிடுவதற்கு 1946 இலக்கம் 12 களியாட்டவரி கட்டளைச்சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழான விதிமுறைகளின்படி முலட்டியன பிரதேச சபை செயலாளரினால் தீர்மான புத்தகத்தில் இலக்கம் 2024/04/05/01 இல் குறிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தை தென்மாகாணத்தின் கௌரவ ஆளுநரான எம். கே. பந்துல ஹரிஸ்சந்திர ஆகிய நான், 1989, இலக்கம் 12, பிரதேச சபை (துணை விதிகள்) பிரகாரம் என் மீது சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**எம். கே. பந்துல ஹரிஸ்சந்திர,**
தென்மாகாண ஆளுநர்.

ஆளுநர் செயலகம்,
காலி,
2024, ஒற்றோபர் 29.

**தீர்மானம்**

1984, இலக்கம் 37 களியாட்டவரி (திருத்தப்பட்ட) சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1946, இலக்கம் 12 களியாட்டவரி கட்டளைச்சட்டத்தின் 2 (1) உப பிரிவின்படி சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் முலட்டியன பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் அமைந்த பகுதியில் நடாத்தப்படும் குறித்த கட்டளைச்சட்டத்தின் விபரிக்கப்பட்டுள்ள யாதுமொரு களியாட்ட நடவடிக்கைக்காக செலுத்தப்படும் தொகையில் 10% (பத்து சத வீதம்) தொகையை வரியாக விதித்து அறவிடப்பட வேண்டுமென்றும் இந்த தீர்மானமானது வர்த்தமானியில் பிரசுரமாகும் மாதத்தை தொடர்ந்து வரும் மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றும் முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மேலே விதிக்கப்பட்ட களியாட்டவரியானது குறித்த களியாட்ட நடவடிக்கை நடாத்தப்படும் தினத்திற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அமைப்பு அல்லது அமைப்பாளர்களினால் முறையாக முறையாக முலட்டியன பிரதேச சபைக்கு செலுத்தப்படவேண்டமென்றும் முலட்டியன பிரதேச சபைசெயலாளரான என்னால் முடிவு செய்யப்பட்டது.

EOG 01- 0040

1A - PG6979 - 07 (2025/01)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*